## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

# நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.


சங். 143:8

**செய்தி மலர்**
**2021**
**மே**

இதழ் : 1
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் மே மாதத்திலும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவாராக.

தீர்க்கதரிசியாகிய தாவீது கூறினான் " நான் நடக்கவேண்டிய வழியை எனக்கு **காண்பியும்** உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்" என்று (சங்கீ–143:8)

ஆம் பிரியமானவர்களே, நாமும் இந்த ஜெபத்தை ஒவ்வொரு நாளும் காலை வேளையில் ஆண்டவரிடம் ஏறெடுக்க தவறக்கூடாது. அப்படி ஏறெடுக்கின்றபொழுது ஜெபத்தை கேட்கிற தேவன் நமக்கு வெளியரங்கமாய் பதில் தந்து அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து அற்புதமாய் வழி நடத்துவார். நம் பாதையெல்லாம் நெய்யாய் பொழியும்படியாய் ஆசீர்வதிப்பார். (சங்கீ–65:11) இதேவிதமாய் ஜெபித்த ஒருசில தேவமனிதர்களை குறித்தும் அவர்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை குறித்தும் கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. எலியேசர்........

ஆபிரகாமின் மூத்த வேலைக்காரனாகிய எலியேசர் ஈசாக்குக்கு பெண் பார்க்க ஆபிரகாமின் இனத்தாரிடத்திற்கு போய் அந்த ஊரை சேர்ந்தவுடன் ஒரு ஜெபம் செய்தான். "என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரே என் பிரயாணத்தை நீர் இப்பொழுது வாய்க்கப்பண்ணுவீரானால் இதோ தண்ணீர் துரவண்டையிலே நிற்கிறேன். தண்ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையை நான் நோக்கி உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்கு குடிக்க தரவேண்டும் என்று கேட்கும்போது நீ குடி என்றும் உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண்ணே கர்த்தர் என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாக வேண்டும்" என்ற அந்த சமயத்திலே ரெபேக்காள் தன் குடத்தை தோள் மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வந்து தண்ணீர் மொண்டாள். அவளிடத்தில் போய் எலியேசர் தண்ணீர் கேட்டான். அவளோ தன் தோள் மேலிருந்த குடத்தை இறக்கி குடியும் உம் ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள். எலியேசர் கேட்டபடியே இந்த அடையாளம் மூலம் ஆண்டவர் பேசினார். தன் எஜமானுக்கு மனைவியை மிக எளிதாக கண்டுகொண்டான். இந்த பெண் ஆபிரகாமுடைய சகோதரனுடைய

3 குமாரத்தியாகவும் இருந்தாள். அதனால் அவன் சொன்னான் " நான் என் எஜமானுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்கு கொள்ள என்னை நேர் வழியாய் நடத்தி வந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக என்று கர்த்தரை பணிந்து கொண்டான்.

எத்தனை ஆச்சரியம் பாருங்கள் கர்த்தருக்கு தன் வழியை ஒப்புவித்து ஜெபித்த இந்த வல்லமையான ஜெபம் எத்தனை அற்புதத்தை செய்தது.

உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். (நீதி-3:5,6)

## I. பவுல் அப்போஸ்தலன்.........

கிறிஸ்தவர்களை துன்புறுத்திக் கொல்லவும் வீடுகள் தோறும் நுழைந்து புருஷர்களையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டு போய் காவலில் போடுவித்து சபையை பாழாக்கவும் சீஷரை பயமுறுத்தி கொலை செய்யும்படி சீறி பிரதான ஆசாரியனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு சவுல் தமஸ்குவுக்கு போகிற வழியிலே சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச்சுற்றி பிரகாசித்தது. அவன் கண் குருடானவனாக தரையிலே விழுந்தான்.

அப்பொழுது இயேசு சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே. முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் என்றார். உடனே அவன் நடுங்கி திகைத்து **ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்** என்று கேட்டான் அதற்கு கர்த்தர் நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ. நீ செய்யவேண்டியது அங்கே உனக்கு சொல்லப்படும் என்றார்.

அந்தபடியே கர்த்தர் அனனியா என்ற பேருள்ள தீர்க்கதரிசியை அவனிடத்தில் அனுப்பி அவனை புறஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் சுவிசேஷத்தை அறிவித்து ஆண்டவர் நாமத்திற்காக எவ்வளவாய் பாடுபடவேண்டும் என்பதை விவரித்துக்கூறினார். அவனை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். சவுல் என்ற பெயரை பவுல் என்று மாற்றினார்.எத்தனை ஆச்சரியம் பாருங்கள். பவுல் வாழ்க்கையை தலைகீழாய் மாற்றியதற்கு ஒரே காரணம் அவன் ஆண்டவரை பார்த்து நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று ஏறெடுத்த ஜெபம் மாத்திரமே. (அப்-9:1-20)

நாமும் ஆண்டவரை பார்த்து இது போல் ஜெபிக்கலாமே. நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியை காட்டுவேன் உன்மேல் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (சங்கீ-32:8)

## 2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து..........

சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுவதற்கு சற்று முன்பு இயேசு கிறிஸ்து கெத்சமெனே தோட்டத்திற்கு போய் கர்த்தரை பார்த்து ஒரு ஜெபம் செய்தார். "என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது. என்று (மத்–26:39) பிதாவின் சித்தம் என்னவென்பதை அவர் கேட்டபடியினால் அவரைத் தேற்றவும், பலப்படுத்தவும் வானத்திலிருந்து ஒரு தூதனை கர்த்தர் அனுப்பி அவரை தேற்றினார். (லூக்–22:43)

என் அன்பு சகோதர சகோதரிகளே, பாடுகள் வருத்தங்கள் வழியாய் நாம் கடந்து போனாலும் அதன் மத்தியிலும் நாம் ஆண்டவரை பார்த்து ஆண்டவரே எது உம்முடைய சித்தம் இந்தக் கஷ்டங்களையெல்லாம் தாங்கிக்கொள்ள எனக்கு பெலன் தாரும் என்று ஜெபிக்கும்பொழுது ஆண்டவர் நம்மையும் தேற்றுவார். பரிசுத்த ஆவியானவரை நமக்குத் துணையாய் தந்து பாடுகள் மத்தியிலும் பாடி துதிக்கக்கூடிய கிருபைகளை நமக்கு தருவார். "ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமல் இருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கபட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்" (ரோம–8:26,28)

இயேசுவினுடைய தியாகம் உலக மக்களை இரட்சித்து நித்திய ஜீவனை அருள் செய்தது. அதேவிதமாக நம்மையும் கூட கர்த்தர் ஆசீர்வதிப்பார். என்னப் பாதையில் நடக்கவேண்டுமென்று ஆண்டவரை கேட்டு தெரிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டும். அப்பொழுத நம்மையும் அநேகருக்கு ஆசீர்வாதமாக கடவுள் மாற்றுவார்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து சகல கிருபைகளினாலும் நம்மை நிரப்புவாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக.

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதரன்

சபையன் ஊழியர் சகோ. ஸ்டாலின்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவம் நமக்காக சிலுவையில் மரித்தார். அவர் மரிக்கும் தருவாயில் கூட கொஞ்சம் பெலன் இருந்த போதிலும் சிலுவையில் "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று சொல்லி மன்னிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினார். பின்பு பிதாவின் சித்தத்திற்கு ஒப்புகொடுத்து உண்மையுள்ளவராய் இருந்து நமக்காக சிலுவையில் மரித்து "இரட்சிப்பு" எனும் மீட்பை கொடுத்தார். எவ்வளவு பெரிய அன்பு நம் இயேசுவின் அன்பு ஆமென். அல்லேலூயா.

ஆம் பிரியமானவர்களே, நாமும் இதுபோல கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்து சாட்சியாய் வாழ்ந்து கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுவோமாக.

கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

ஷீபா பிரசாத்

## ஜெபத்தில் இயேசு

நாம் இயேசுவுடன் ஜெபத்தின் வழியாக இணைந்திருந்தால் நாம் நல்ல கனிகளைக் கொடுப்போம். தேவனோடு கூடிய இணைப்புக்கு "ஜெபம்"' சரியான பாதையாய் அமைகிறது. பிதா தோட்டக்காரராக இருக்கிறார். இயேசு அதில் திராட்ச செடியாய் இருக்கிறார். நாமோ திராட்ச செடியில் கிளைகளாக இருக்கிறோம். திராட்ச செடியாய் இருக்கிற இயேசு நமக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்திருக்கிறார். பூமியில் நாம் செய்யும் ஜெபத்தை விண்ணில் சேர்ப்பதற்கான திறவுகோலையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். இயேசுவும் நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் எவைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று நமக்கு கற்றுத் தந்திருக்கிறார். அதை நாம் வேதத்தில் அறிந்து கொள்கிறோம். அதுமட்டுமல்லாது இயேசுவே அதற்கு முன்மாதிரியாகவும் இருந்திருக்கிறார்.

மரித்த லாசருவை இயேசு கல்லறையினின்று எழுந்திருக்கச் செய்யு முன்பு இயேசுவும் ஜெபித்தார் என்பதை நாம் வேதத்தின் ஊடாய் விளங்கிக் கொள்ள முடிகிறது (யோவா. 11:41–44). இயேசு தன் அண்டையில் வந்த ஜனங்களை போஷிப்பதற்காக, அவரிடம் கொடுக்கப்பட்ட 5 அப்பம் மற்றும் 2 மீன்களையும் இயேசு பெற்றுக் கொண்டு ஜெபித்துதான் அவைகளை ஆயிரங்களாய் பெருகப்பண்ணினார் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஜெபிக்கின்ற பொழுது உதட்டளவில் ஜெபிக்காமல் விழித்திருந்து (கருத்தாய்) ஜெபியுங்கள் என்றும் இயேசு நமக்கு கற்றுத் தருகிறார் (மத். 26:36–41). இயேசு பாடுகளின் ஊடாய் கடந்து செல்லும் பொழுதும் அவர் தனக்காய் மட்டும் ஜெபிக்காமல், நீங்கள் சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள் என்றும் நமக்கு சொல்லித் தந்திருக்கிறார். நம்முடைய ஜெபங்கள் நம்முடைய பாவ பலகீனத்தினிமித்தம் நம்மிடமே திரும்பி வந்துவிடாதபடி, நமக்காக இயேசு பிதாவிடம் பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார் (யோவா. 17:1–26).

நாம் அநேக வேண்டுதல்களோடும் விண்ணப்பங்களோடும் ஜெபிப்பதற்கு இயேசு கிறிஸ்தும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை நமக்குத் தந்து ஜெபிக்க உதவியும் செய்கிறார். ஜெபிப்பதற்கு குறித்த நேரம் காலம் கிடையாது. எப்பொழுதும் ஜெபிக்கும்படியான உரிமையை தேவன் நமக்குத் தந்திருக்கிறார் (சங். 55:17). நம் தேவனும் நமக்காக உறங்காது தூங்காது நம் ஜெபத்தை கேட்பவராகவும் இருக்கிறார். இயேசுவோடு இணைந்து ஜெபித்து ஜெயம் பெற்று வாழ தேவன் தாமே நமக்கு துணை செய்வாராக. ஆமென்.

## சாத்தானின் தந்திர ஆயுதங்கள்

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (I யோ– 2:16)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

அன்பான தேவனுடைய பிள்ளைகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்து போன ஐந்து மாதங்கள் முழுவதும் தேவன் நம்மை நடத்தி வந்ததிற்காக நன்றி செலுத்தி ஸ்தோத்தரிப்போம். அன்பான தேவனுடைய பிள்ளைகளே கிறிஸ்தவர்களாகிய நமக்கு அநேக சோதனைகள்வருகின்றன. இந்த சோதனை பெரும்பாலும் சாத்தான் மூலமாகவே வருகின்றன.அவன் தன்னுடைய தந்திரமான மூன்று ஆயுதங்களால் தாக்கி சோதனை தருகின்றான். அவை என்ன என்று பார்த்தால்I. I. மாம்சத்தின் இச்சை,2. கண்களின் இச்சை, 3. ஜீவனத்தின் பெருமை. இதைதான் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய நிரூபத்திலே I யோவான் 2:16லே வாசிக்கிறோம். ஏதேன் தோட்டத்திலே ஆதாமையும்,ஏவாளையும். இந்த சாத்தான் தன்னுடைய தந்திர ஆயுதங்களினாலே வீழ்த்தினான், முதல் வெற்றியையும் பெற்றான்.இப்பொழுதும் இதையே பயன்படுத்தி பலரை வீழ்த்தி வருகிறான். சாத்ததானுக்கு வேதத்தில் அநேக பெயர்கள் இருந்தாலும், முதலாது கொடுக்கப்பட்ட பெயர் தந்திரமுள்ளவன்.(ஆதி3:1) சாத்தான் ஏவாளை தந்திரமாக வஞ்சித்தான். இதைதான் ஆதி 3:6 ல் புசிக்க நல்லதும் ( மாம்சத்தின் இச்சை) பார்வைக்கு இன்பம் ( கண்களின் இச்சை)புத்திக்கு தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க ( ஜீவனத்தின் பெருமை)என்று வாசிக்கிறோம். இவற்றை குறித்து ஒன்றன்பின் ஒன்றாக நாம் தியானிப்போம்.

I. மாம்சத்தின் இச்சை, முதலாவது அவன் மாம்சத்தின் இச்சையை கொடுக்கிறான். மாம்சத்தின் இச்சை என்ன என்று பார்க்கும் போதுமனிதர்களின் உணர்வுகளை திருப்த்தி படுத்துகிறதாயிருக்கிறது. வேதத்தில் ஏவாளை குறித்து பார்க்கும் போது தன்னுடைய வயிற்று பசியை திருப்தி படுத்த தன்னுடைய உன்னதமான சேஷ்டபுத்திர பாகத்தை தனது தம்பியாகிய யாக்கோபுனிடத்தில் விற்று போட்டான்(ஆதி 25:33). சேஷ்டபுத்திர பாகம் என்பது முதல் பிள்ளையாய் பிறப்பவர்களுக்கு சில பிறப்புரிமைஉண்டு சொத்துரிமை இருமடங்கு கிடைக்கும்(உபா 21:17) தந்தையின் விஷேசித்த ஆசீர்வாதமும் உண்டு. அவர்களே அந்த குடும்பத்தின் தலைவராக விளங்குவர். இத்தகைய சிறப்பை ஏசா மாம்சத்தின் இச்சையால் இழந்து போனான். எனவே இதை குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

2. கண்களின் இச்சை, இரண்டாவதாக அவன் கண்களின் இச்சையை கொடுக்கிறான்.கண்களின் இச்சை என்பது பார்வைக்கு இன்பமாகன காரியங்களை கொடுப்பதாகும். வேதத்திலே சிம்சோன் என்கிற பலசாலியை குறித்து பார்க்கும் போது, தன்னுடைய கண்களின் இச்சைக்கு அவன் விழுந்து போகிறான்(நியா 14:3) ஒரு முறை அவனை சிங்கத்தை ஆட்டை போல பீறிபோட்டான் கழுதையின் தாடை எலும்பை கொண்டு

ஆயிரம் பேரை கொன்றவன், அவனுடைய கண்களின் இச்சைகளினாலே, அவனுடைய முடிவு மிகவும் பரிதாமுள்ளதாய் இருந்தது. இதை குறித்தும் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

3. ஜீவனத்தின் பெருமை. மூன்றாவதாக ஜீவனத்தின் பெருமை இது மனிதனுடைய இனத்தை வைத்தோ, சொத்தை வைத்தோ அல்லது புகழை வைத்தோ செயல்படுவது.வேதத்திலே எசேக்கியா ராஜாவை பார்க்க வந்த போது, தன்னுடைய பொக்கிஷ சாலையையும்,வெள்ளியையும், பொன்னையும், கந்தவர்கங்களையும், நல்ல பரிமளதைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும் காண்பித்தான்.(ஏசாயா 39:2) அவர்களுக்கு காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை என்று வசனம் கூறுகிறது. அப்பொழுது ஏசாயா திர்க்கதரிசி எசேக்கியாவினிடத்தில் நீர் இப்படி செய்ததின் நிமித்தம், உன் விட்டில் உள்ளதும் பிதாக்கள் சேர்த்து வைத்த அனைத்தும் ஒன்றும் மீதியில் வைக்கபடாமல் எல்லாம் பாபிலோனுக்கு கொண்டு போகப்படும், மேலும் உன் சந்ததியின் குமாரர்கள் பாபிலோன் அரண்மனையில் வேலைகாரராய் இருப்பார்கள் என்றான். இவ்வாறாக தன்னுடைய ஜீவனத்தின் பெருமையின் நிமித்தமாய் சில வருடங்களுக்கு பின்னர் ,எசேக்கியா ராஜாவின் அரண்மனையில் இருந்த அனைத்தும் பாபிவோன் தேசத்திற்கு கொண்டு போகப்பட்டது. இவருடைய சந்ததியின் குமாரர்களும் சிறையாக பிடித்து போகப்பட்டனர். எனவே ஜீவனத்தின் பெருமையை குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவுன் வெற்றி : இயேசு கிறிஸ்து நம்மை போலவே எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டார். ஆதியில் பயன்படுத்திய அதே தந்திர ஆயுதங்களை பயன்படுத்தினான். ஆனால் இயேசு வெற்றி பெற்றார்.(லூக்கா 4:1–13)வசனங்களை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது கல்லுகளை அப்பமாக மாற்றுதல் (மாம்சத்தின் இச்சை) உலகத்தின்ராஜ்ஜியங்கள்(கண்களின் இச்சை) தேவாலயத்தின் உப்பரிகை(ஜீவனத்தின் பொருமை) ஆதாம் ஏவாளை தந்திரமான ஆயுதங்களால் வீழ்த்திய சாத்தா , இயேசு கிறிஸ்துவை மேற்கொள்ள முடியவில்லை காரணம் அவர் பாவமில்லாதவராய் இருந்தார்.(எபி 4:5) தேவனுடைய பிள ்ளைகளே நம்முடைய வாழ்விலும் சாத்தான் தன்னுடைய தந்திர ங்களை பயன்படுத்த ஆயுதங்கள் உண்டு இயேசு கிறிஸ்துவை அவன் சோதித்த சூழ்நிலையை நன்றாய் தியானிக்கும் போது அவர் பசியாய் காணப்பட்ட சமயத்தில்தான் சோதனையை கொடுக்கிறான். அது போல நம்முடைய வாழ்விலும் சோர்ந்து போன சமயத்தில் அவன் சோதிக் வாய்புண்டு, நாம் கடைசி காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிட கூடாது.

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக நம்மை அவன் எளிதாய் வீழ்த்த வாய்புண்டு. தாவீது தீங்கான காரியத்தை என் கண் முன் வைக்கமாட்டேன் (சங் 101:3) என்றார். அது போல நாமும் தீங்கான காரியத்திற்கு விலகியிருப்போம். இயேசு கிறிஸ்து எப்படி வசனத்தின் மூலமாய் சாத்தானை துரத்தினாரோ அதே போல நாமும் வசனம் என்ற போர்வாளை கையில் எடத்துக் கொள்வோம் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நமக்கு அவர் மூலமாய் ஜெயம் எடுக்கும்படி கிருபையளிகப்பட்டுள்ளது. எனவே நாம், தேவனுக்கு கீழ்படிந்து, (தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொண்டு (எபேசி 6:17) சாத்தானை எதிர்த்து நிற்போம், அப்பொழுது அவன் நம்மை விட்டு ஓடிப்போவான்(யாக் 4:7) நாமும் ஜெயமாய் வாழ்திடலாம்.

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

## உழியர்கள் பகுதி

நெகேமியா 12:36ல் தான் தாவீதை தேவனுடைய மனுஷனாகிய தாவீது என்று கூறப்பட்டுள்ளது. தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் . தனக்கு தோன்றியபடியெல்லாம் ஜெபிக்கிறவன். ' நீர் ஏன் தூரமாய் நிற்கிறீர், என் ஜெபத்திற்கு செவிசாயும் ', கவனித்து கேளும், என்று தேவனிடம் நேரே பேசுகிறவன் நேரிடையாக கேட்கிறவன் தாவீது. அதனால் தான் அவன் தேவனுடைய இருதயத்திற்குஏற்றவன். இந்த தாவீது என்ற மனுஷனை தேவன் தேடி அவனை ராஜாவாக மாற்றி தன் ஜனத்தை மேய்பதற்கு நல்ல மேய்ப்பனாக உருவாக்கினார்.

I சாமுவேல் 13:14ல் கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனை தமக்கு தேடி (God sought a man) அவனைத்தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாய்இருக்கும்படி கட்டளையிட்டர்(He made him a captain). சங்கீதம் 78:70-71)ல் தம்முடைய தாசனாகிய (servent) தாவீதை தெரிந்து கொண்டு ஆட்டுத்தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தர் ... அவனை தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம் சுதந்தரமாகிய இஸ்ரவேலை மேய்பதற்கு அழைத்து கொண்டு வந்தர் (He made him a Shepherd)

தேவன் ஒருவனை தமக்கென்று தெரிந்து கொண்டாரானால் அவனை சரியாக உருவாக்குவர்.

ஏசாயா 43:1 யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர்.....என்று வேதம் கூறுகிறது.

யாக்கோபுதான் இஸ்ரவேல், யாக்கோபு எத்தனாய் இருந்தான். அவனை கர்த்தருடைய ஊழியக்காரனாக உருவாக்கினார்.

அது போல தேவனுடைய மனுஷர்களாகிய நம்மை இந்த உலகத்தில் வைத்து உலக ஜனங்கள் மத்தியில் தேவனுடைய மனுஷர்களாய் நாம் விளங்கும்படியாய் படிப்படியாய் நம்மை உருவாக்குகிறார். நாமெல்லாம் பரமபிதாவினால் நடப்பட்ட நாற்றுகள். நம்மை யாராலும் வேரோடு பிடுங்கி எறிய முடியாது. பரமபிதாவினால் நடப்படாத நாற்றெல்லாம் பிடுங்கி எறிந்து போடமுடியும். தேவனுடைய மனுஷன் அழவேண்டும்: 2 ராஜாக்கள் 8:11 பின்பு தேவனுடைய மனுஷன்: தன் முகத்தைத் திருப்பாமல் அவன் சலித்துப்போகுமட்டும் அவனை நோக்கிக்கொண்டே அழுதான்.

தேவனுடைய மனுஷர்கள் தங்களை சுற்றி நடக்கிற காரியங்களுக்காக அழவேண்டும்.
யோவேல் 1:9 கர்த்தரின் ஊழியக்காரராகிய ஆசாரியர்கள் துக்கிக்கிறார்கள்.
யோவேல் 1:11 திராட்சரசத்தோட்டக்காரரே, அலறுங்கள்
எரேமியா கதறுகிறார்: (9:1) என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்

இயேசு எருசலேமை ஏறிட்டுப்பார்த்தார். மேய்ப்பனில்லாத ஆடுகளை பார்த் கண்கலங்கினார்.

அருமையான தேவ தாசர்களே. ஊழியர்கள் அதிகம் உண்டு ஆனால் ஆத்துமாக்களுக்காக அழுது கண்ணீரோடு ஜெபிக்கிறவர்கள் குறைவு

(நன்றி இயேசு ஜீவிக்கிறார் ஊழியம்)

**என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.** (யோவேல் 2:26)

## 2021 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு விடை

1. இரண்டு மகன்கள் (யாத். 18:3-4)
2. பத்து முறை (ஆதி. 31:41)
3. சீனாய் மலை (யாத். 19:20)
4. போத்திபார் (ஆதி. 39:5)
5. மீதியான் (யாத். 3:1)
6. சத்தமிட்டு அழுதான் (ஆதி. 45:2)
7. மோசே-80, ஆரோன்-83 (யாத். 7:7)
8. நாற்பது நாட்கள் (ஆதி. 7:12)
9. தலைக்கு ஒரு ஓமர் அளவு (யாத். 16:16)
10. கோடா கோடியாய் பெருகுவாயாக (ஆதி. 24:60)
11. இருக்கிறவராகவே இருக்கிறேன். (யாத். 3:14)
12. சித்தீம் மரத்தால். நீளம்-2.5 முழம், அகலம்-1.5 முழம், உயரம்-1.5 முழம். (யாத். 37:1)
13. அரண்மனை அதிகாரி / எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன். (ஆதி. 41:40, 41)
14. சிப்போராள், பூவாள் (யாத். 1:15)
15. பெலிஸ்தருடைய தேசம் (ஆதி. 21:34)

### 2021 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. எழிலரசி டேனியல்
Sis. மெர்ஸிலின் தயா இயேசுரெத்தினம்
Sis. வனிதா காளிமுத்து
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்

........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; ... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

Sis. மரிய குளோரி தாஸ்
Sis. தேவ கிருபை
Sis. கேத்ரீனா சுகன்யா
Sis. சஜின் ஜீவா /பிரான்கிளின்
செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
சகோ. ஜெபசிங்
சகோ.ஜெரேமியா
சகோ. ஸ்டீபன். T
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்.
சகோ. ஜோன் செல்வா சிங்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
Sis. எலிசபெத் ஸ்டாலின்
செல்வன். அஜாரியா பிரவீண் குமார்
செல்வி. அனாஸ்டினா கமலதாசன்
Sis.ஹெலன் ஷீஜா ராபின்
செல்வி. சித்ரா ராஜன்
Sis. ஜெயலஷ்மிகொம்மையன்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
சகோ. எபிநேசர்
Sis. பியூலா ஜெயக்குமார் ஞானதாஸ்
செல்வன்.ஜாஸ்வா ஷாஜின் ஹெக்கில்
செல்வன். டோனி ராமமூர்த்தி
சகோ. ஜோன்ஸ் ராஜ்
சகோ. கலியமூர்த்தி
சகோ. ராஜேந்திரன்
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
சகோ. சாமுவேல் தாசையா
Sis. தங்க மெல்பா தாசையா
செல்வன். எபின் பிரைஸ் கிருஸ்டோபர்
சகோ. தர்மர்
செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
சகோ. கொமையன்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் யோசுவா
செல்வி. மீனா குமாரி சுகுமார்
Sis. குமதினி வில்ஸன்
செல்வன். ஏபெல் ராஜ் எபிநேசர்
செல்வி. மெர்ஸி தெபோரா ஆமோஸ்
சகோ. அந்தோணி சாமி
சகோ. விஜயன்
சகோ. ஞான சேகர்
செல்வி. ஜோயல் ஹெக்கில்
சகோ. ஆசீர்வாதம்
Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. தைா ஹெக்கில்
செல்வன். கதிரவன் சுகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

### உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும(ஆதி .22:18)

திருமதி /திரு. பெபிட் செல்பின்
திருமதி / திரு. எபிநேசர்
திருமதி / திரு. சுஜின்ஹெக்கில்
திருமதி / திரு. ஸ்டாலின்
திருமதி / திரு. வில்சன். M
திருமதி / திரு. எட்வின் சாம்
திருமதி / திரு. கிரன் குமார்
திருமதி / திரு.சுபின் சிங்
திருமதி / திரு. தாமஸ்
திருமதி / திரு. ஆன்டன்மைக்ககேல்
திருமதி / திரு. ஜோன்ஸ் ராஜ்
திருமதி / திரு. கொம்மையன்
திருமதி / திரு. ஜான் மில்லர்
திருமதி / திரு.ஆல்வின் ஜுலியஸ்
திருமதி / திரு.ஜாண்போஸ்கோ
திருமதி / திரு. எட்வர்ட் சந்தோஷ்
திருமதி / திரு. ஜெயசேகர்
திருமதி திரு. கிருஸ்டோபர்
திருமதி / திரு. வினீஷ்

# 2021 மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/05/2021 | சகோ. ஜினோ | சகோ.பிராங்ளின் (NBTC) |
| 09/05/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. அருண் இம்மானுவேல் |
| 16/05/2021 | சகோ. ஜக்துரை | சகோ.எபிநேசர் |
| 23/05/2021 | சகோ. ஜான் கேஸ்டன் | சகோ. சுகுமார் |
| 30/05/2021 | சகோ. தாமஸ் | சகோ. கிறிஸ்டோபர் (GTC) |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 10 முதல் 12 வரை மாலை 3:30 முதல் 5:00

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/05/2021 | வாலிபர் ஆராதனை | |
| 14/05/2021 | சகோ. பிரசாத் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 21/05/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/05/2021 | தாய்மார்கள் ஆராதனை | |

14/05/2021 அன்று பொதுமன்றம்

13/05/2021 அன்று முழு இரவு ஜெபம்

இடம் – பாஹீலில் உள்ள சபையின் ஜெப வீடு

நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதனையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதனை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 5 மணி முதல் 6:15 வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 5:00 மணி முதல் 6:15 வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 மே மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. யார் ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது?
2. சோர்ந்து போகாமல் எப்பவும் ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னது யார்?
3. காணாமல் போனதை தேட வந்தது யார்?
4. பாடையை தொட்டது போது உயிர் பெற்றவன் யார்?
5. நாய்கள் யாருடைய பருக்களை நக்கினது?
6. சமாதானத்தோடே போகவிடுகிறீர் என்றது யார்?
7. நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன என்றவர் யார்?
8. இதோ நீ கர்ப்வதியாகி ஒரு குமாரனை பெறுவாய் என வாசிப்பதெங்கே?
9. பற்பல வேலைகளை செய்வதில் மிகவும் வருத்தமடைந்த ஸ்திரீ யார்?
10. தேவனாலே கூடாத காரியம் ஒன்றுண்டோ என்றது யார்?
11. அன்னாள் யாருடைய மகள்?
12. நான் பரத்துக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்றது யார்?
13. வேசிகளிடத்தில் தன் ஆஸ்தியை அழித்து போட்டவன் யார்?
14. அப்பம் புசிக்கும் போது கண்கள் திறக்கப்பட்டவர்கள் யார்?
15. மரித்தபின் ஆபிரகாமின் மடியில் இருந்தவன் யார்?

விடைகளை வருகின்ற 20-05-2021க்குள்(whatsApps #66015503) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் லூக்கா எழுதிய சுவிசேஷ புத்தகத்தில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## கரையில்லாத ஜீவ ஆறுகள்

ஆறு என்றாலே கரைகள் இருக்கும் கரைகள் இல்லாத ஆறு எங்காவது இருக்குமா ? இருக்கின்றனவே!

இந்த ஆறுகள் கடலில் இருக்கின்றன இவற்றுள் 965 கிலோ மீட்டர் அகலத்திற்கு பாயும் அறுகளும் உள்ளன இவை ஒரே நொடியில் 5 கோடி டன் நீரை பொழியும்

கடலில் இருந்து கிடைக்கும் கடல் உயிரினங்களில் எழுபது சதவிகிதம் இத்தகைய கடல் ஆறுகளில்தான் தோன்றுகிறது என்றால் உங்களால் நம்ப முடியுமா?

# மிஷனரி செய்திகள்

## 1. கொலம்பா (521–597)

துறவு வாழ்க்கை, குடும்பங்களை விட்டு இறைவனையே சார்ந்து வாழும் வாழ்வு. உலக ஆசாபாசங்களுக்கு இதில் இடமில்லை. எளிமையும், தனிமையுமே இதன் நண்பர்கள். ஐரோப்பிய நாடுகளில் இத்துறவு வாழ்வை அநேகர் விரும்பி ஏற்றுக்கொண்டிருந்த காலம். சிறு சிறு மடங்கள் ஆங்காங்கே தோன்றிக்கொண்டிருந்தன.

ஆடம்பரமற்ற வாழ்வும், எளிய உணவும், வேத வாசிப்பும், தியானமும் மக்களை மனதைக் கவர்ந்தன. துறவிகளின் பரிசுத்த வாழ்க்கை ஜொலிக்க ஆரம்பித்தது. அயர்லாந்தில் பிறந்த கொலம்பா இவ்வாழ்வால் மிகவும் கவரப்பட்டார். ஆத்ம வளர்ச்சியில் அனுதினமும் வளர அரும் பிரயாசப்பட்டார். எனவே துறவு மடத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். உலகப் பற்றுகள் அவரை விட்டு ஓட்டம் பிடித்தன.

கிபி 550–ல் டர்மாக் என்னுமிடத்தில் ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தை நிறுவினார். இவருடைய தூய வாழ்க்கையையும், சொற்பொழிவையும் கேட்ட மக்கள் இரவும் பகலாக அவரைக் காணத் துடித்துக்கொண்டிருந்தனர். பலர் துறவு வாழ்வை மேற்கொண்டு இம்மடத்தில் இணைந்தனர். அந்நாட்டின் அரசன் தீயவழிகளில் சென்றதால் அவனைத் திருத்த முயற்சிகள் மேற்கொண்டனர். அம்முயற்சிகள் பலனளிக்காததால் அந்நாட்டை விட்டு வெளியேறினார். ஐயோனா என்ற தீவில் வந்து சேர்ந்த இவர், அங்கு ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தைக் கட்டி அநேகரைக் கிறிஸ்துவுக்குள் நடத்தினார்.

வேதம் வாசிப்பதையும், ஜெபம் செய்வதையுமே பிரதானமாகக் கொண்ட கொலம்பா தரையில் உறங்கி ஒரு கல்லைத் தனக்கு தலையணையாகப் பயன்படுத்தி, எளிய உணவை உண்டு சிறப்பான வாழ்வை நடத்தியவர். ஏழைக் குடியானவன் முதல் அரசன் வரை அனைவரும் இவர் சொற்படி கேட்டு நடந்ததால் நாட்டில் அமைதியும், இன்பமும் அளவில்லாமல் காணப்பட்டது.

## 2. மார்ட்டின் லூத்தர் கிங் (1929–1968)

இனவெறி அமெரிக்கர்களிடையே இணைப்பிரியாமல் இருந்த காலம். கருப்பு நிறத்தவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகவும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இழிவானவர்களாகவும் நடத்தப்பட்டனர். வெள்ளையர்களுக்கும், கருப்பர்களுக்கும் தனித்தனி பள்ளிகளும் கல்லூரிகளும் அமைக்கப்பட்டு, கல்வி அளிக்கப்பட்டு வந்தது. ஒற்றுமை என்பது கானல் நீராககூடக் காட்சி அளிக்காமல் இருந்தது. மார்ட்டின்

லூத்தர் கிங் புரட்சிகர மனிதனாக புதுமைகள் செய்யப் புறப்பட்டார். கறுப்பு இனத்தவரின் காவலனாக, வெள்ளை இனத்தவர்களுக்கு நண்பனாக அவர்களிடையே சமத்துவம் ஏற்படவும், பொதுநீதி கிடைக்கவும் போராட்டங்களை நடத்தினார்.

60 லட்சம் மைல்கள் தூரம் அமெரிக்காவைச் சுற்றி வந்து 2500 கொள்கை விளக்கப் பொதுக்கூட்டங்களை நடத்தி, பகைவருக்கும் அன்பு செலுத்தும் ஆன்மீக வழியில் பதினொரு ஆண்டுகள் போராடி வெற்றி கண்டார். கருப்பு இன மக்களைத தட்டி எழுப்பும் கடிதம் ஒன்றை எழுதினார். இது உலகப் புகழ் மிக்க உரிமைக் குரலாக அமைந்தது. உலக நாடுகள் அனைத்தின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்தார். சுமார் 2 லட்சம் கருப்பு இனத்தவர்களைக் கூட்டிச் சேர்த்து, தன் கனவுகளை வெளிப்படுத்தினார்.

போராட்டங்கள் வெற்றிப் பெற்றதால் பட்டங்கள் அவரைத் தேடி வந்தன. 1965–ம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று டைம்ஸ் பத்திரிகை புகழ்ந்தது. உலக சமாதானத்திற்கான நோபல் பரிசைத் தமது 35–ஆம் வயதிலேயே பெற்றார்.

சமத்துவத்தை மலரச் செய்த இவர், நிறவெறி பிடித்த ஒருவனால் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டார். இம்மாபெரும் விடுதலை வீரர் இறைப்பட்டம் பெற்ற ஓர் பாப்டிஸ்ட் சபையின் போதகர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பரே! சமத்துவத்தை மலரச் செய்ய என்ன முயற்சி செய்கிறீர்கள்?

வாழ்க்கையின் மிக முக்கியமான கேள்வி எதுவெனில், நாம் மற்றவர்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதே– மார்ட்டின் லூத்தர் கிங்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்

சி. சுகுமார்

## உலகின் முதன்மை பெண்கள்

1. ஐ நா பொதுச்சபையில் முதல் பெண் தலைவர் விஜயலஷ்மி பண்டிட் ( இந்தியா )
2. விண்வெளியில் அதிக நாட்கள் தங்கி இருந்த முதல் பெண் , சுனிதா வில்லியம்ஸ் (இந்தியா)
3. (195 நாட்கள்) ஐந்து கண்டங்களில் நீந்திய முதல்பெண் பியூலா சௌத்திரி (இந்தியா)
4. ஜிப்ரால்டர் ஜல சந்தியை நீந்தி கடந்த முதல் பெண் ஆர்த்தி பிரதான் குப்தா (இந்தியா)
5. உலகின் முதல் பெண் ரயில் பெண் ஓட்டுநர் சுரேகா யாதவ் (இந்தியா)

"பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை" (ஏசா–54:4)

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். வாலிப சகோதரனே சகோதரியே கர்த்தர் உன்னை நேசிக்கிறார். உன்னை சுற்றி நடக்கும் காரியங்களை குறித்து சிறிதும் கவலைப்படாதே. யாக்கோபின் தேவன் நம்முடைய தேவன். அவர் நமக்கு உயர்ந்த அடைக்கலமாயிருக்கிறார். இந்த மாதத்தில் தேவன் நம் அனைவருக்கும் கொடுக்கும் ஒரு நல்ல வாக்குத் தத்தம் பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை. ஏதோ ஒரு எதிர்பார்ப்போடு எதிர்கால வாழ்க்கை வேலை வாய்ப்பு கடன் சுமை திருமண காரியம் என பல எதிர்பார்ப்புகளோடு தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தும் இன்னும் தேவனிடத்திலிருந்து பதில் கிடைக்கவில்லையே என்று சோர்ந்து போயிருக்கும் உங்களுக்கு தேவன் சொல்கிற "பயப்படாதே நீ வெட்கப்பட்டு போவதில்லை"

## 1. சாத்ராக், மேஷாக், ஆபெத் நேகோவை வெட்கப்படுத்தாத தேவன்..

வேதத்தில் தானியேல் தீர்க்கதரிசி புத்தகத்தில் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ இந்த வாலிபர்களை குறித்து வாசித்தோமென்றால் நன்கு ஜெபித்து எப்பொழுதும் தேவனோடு உறவு வைத்துக்கொள்ளும் நல்ல பழக்க வழக்கங்களை கொண்டார்கள். இந்த சாத்ராக்,மேஷாக்,ஆபத்நேகோ மற்றும் தானியேல்.

நல்ல ஜெபவீரனாக வாழ்ந்த இந்த ஜெபவீரர்களை தேவன் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தார். ஆனால் அவர்களுக்கும் ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஏற்படுகிறது.

தானி–3 அதிகாரம் 5,6–ல் நேபுகாத்நேச்சார் என்ற ராஜா ஒரு பொற்சிலையை உருவாக்கி அதை பணிந்து கொள்ள கட்டளையிட்டான். ஆனால் இந்த வாலிபர்களோ அந்த தவறை செய்யாதபடி நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். (தானி–3:17) என்று சொல்லி அந்த சிலையை வணங்க மறுத்து விட்டனர். ராஜா கோபமடைந்து எரிகிற அக்கினி சூளையில் போட கட்டளையிட்டான். அதன்படி அவர்களும் போடப்பட்டார்கள். ஆனால் தேவன் அவர்களோடு அக்கினி சூளையில் உலாவினார். அவர்கள் முடிகூட கருகாமல் பார்த்துக்கொண்டார்.

வாலிப சகோதர சகோதரிகளே இயேசுவுக்காய் தைரியமாய் இருக்கும்போது எந்த சூழ்நிலையிலும் தேவன் என்னைக் கைவிடுவதில்லை. எப்பக்கம் நெருக்கப்பட்டும் நாம் ஒடுங்கிப்போவதில்லை என்ற விசுவாசம் உங்களிடத்தில் இருக்குமேயானால் நீங்கள் வெட்கப்பட்டு போவதில்லை. ஒரு போதும் உங்களை அவர் கைவிடவும் மாட்டார் விலகவும் மாட்டார்.

நம்முடைய தேவன் ஒரு சில நேரங்களில் நம்மை காயப்படுத்தி காயங்கட்டுகிற தேவனாயிருக்கிறார். இதிலே நம்முடைய விசுவாசம் பெலப்படவும், தேவனோடு உறவு உறுதியாகவும் விளங்கும்படியாக ஒரு சில காரியங்களை அனுமதித்து அதில் வெற்றி சிறக்க செய்வார்.

## 2. தானியேலை வெட்கப்படுத்தாத தேவன்....

தரியு ராஜா அரசாண்ட நாட்களில் நல்ல ஜெபவீரனாக இருந்த தானியேலுக்கு ஒரு சோதனை வருகிறது. நல்ல ஜெபவீரன் அநேக மறைபொருளை தானியேலுக்கு வெளிப்படுத்துகிற தேவன்

தானியேலுடன் இருக்கிறார் என்பதை உணர்த்தும்படி ஒரு காரியத்தை அனுமதிக்கிறார். தரியு ராஜாவை வணங்க வேண்டும் அவரைத் தவிர வேறு யாரையும் வணங்க கூடாது என ஒரு கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் தானியேலோ தேவனோடு கூட பேசுவதை நிறுத்தவில்லை. தினமும் மூன்று வேளை தேவனுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஜெபம் செய்தான். (தானி–6:10)ஒரு கூட்ட ஜனம் தானியேலுக்கு எதிராக எழும்பி தானியேல் பாபிலோன் சிங்கக்குகையிலே தானியேலை போட வேண்டும். ராஜாவின் கட்டளையை மீறிய படியால் அவனை சிங்கத்திற்கு இரையாக்க நினைத்தார்கள். ராஜாவும் தன் கட்டளையிக்கு செவிசாய்த்து சிங்கக்குகையிலே போட அனுமதித்தான்.

தேவன் தானியேலோடு கூட இருந்தார். சிங்கங்களின் வாயை கட்டிப்போட்டு எந்த மனிதர்கள் தானியேலுக்கு எதிராக எழும்பினார்களோ? அவர்களை வெட்கப்படுத்தும்படி பாதுகாத்து தாயேலின் தலையை உயர்த்தினார்.

## 3.யோசேப்பை வெட்கப்படுத்தாத தேவன்..

யோசேப்பு என்னும் வாலிபன் தேவனுக்கு பிரியமானவனாயிருந்தபடியால் சொப்பனங்கள் மூலமாக தரிசனங்கள் மூலமாக அநனோடு கூட தேவன் பேசிக்கொண்டே இருந்தார். ஆனால் அவனுடைய சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு, விற்கப்பட்டு எகிப்தின் பார்வோன் போத்தபார் வீட்டிலே வந்தடைந்தான். எகிப்து அங்கே அவன் மனைவி அவனோடு கூட தவறாக நடக்க முயற்சித்து யோசேப்பின் நற்பெயரை கெடுக்க முயற்சித்தாள். (ஆதி–39:9)

தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்று தன்னை பரிசுத்தமாய் காத்துக்கொண்டான். ஆனால் யோசேப்பு உலகத்தால் நிந்திக்கப்பட்டு சிறைச்சாலையிலே தள்ளப்பட்டான். இறுதியில் யோசேப்போடு இருக்கிற தேவன் பெரியவர் என்பதை சுற்றி இருக்கும் கூட்டம் அறிந்து கொள்ளும்படியாக எந்த இடத்தில் நிந்திக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டானோ? அதே இடத்தில் தேவன் அவன் தலையை உயர்த்தி பிரதம மந்திரியாக உயர்த்தினார்.

இன்று தேவனோடு இருக்கிற நம்மமைப்பார்த்தும் தேவன் சொல்கிறார்.

"பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை"

வாலிபம் இயேசுவுக்கே.

## சகோதரிகள் பகுதி

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள் செய்தி மலர் மூலம் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"கொஞ்சத்தில் உண்மை" என்கிற தலைப்பில் வேதத்தின் அடிப்படையில் நாம் தியானிக்கலாம்.

கொஞ்சத்தில் நாம் எப்படி உண்மையாய் இருக்கவேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு கற்று தருகிறது.

நீதி-15:16 "சஞ்சலத்தோடு கூடிய அதிகப்பொருளிலும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப்பொருளே உத்தமம்"

நீதி-16:18 "அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும் நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்"

ஆம் தேவ பிள்ளைகளே, நாம் வாழும் அன்றாட வாழ்வல் அனேக தேவைகள் உண்டு. அந்த அனைத்து தேவைகளையும் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்கிற விசுவாசம் நமக்கு வேண்டும். அப்படி நாம் விசுவாசித்து காத்திருக்கும் போது கர்த்தர் அதிசயமாய் நம்மை நடத்துவார் என்பதில் ஐயமில்லை.

கொஞ்சம்தான் இருக்கிறது என்று நாம் கவலைபட வேண்டிய அவசியம் இல்லை. அந்த கொஞ்சத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கும் போது திருப்தியடைந்து நாம் மீதம் எடுக்கமுடியும்.

I-தீமோ-6:6 "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்"

ஆம் கர்த்தருடைய பிள்ளைகள் முதலாவது நமக்கு போதும் என்கிற மனம் வேண்டும். அப்போது தான் நாம் கொஞ்சத்தில் உண்மையாய் இருக்க முடியும். நம் நம்பிக்கை கர்த்தரிடம் மட்டுமே இருக்க வேண்டும்.

சங்கீ-123:1-ல் கூறிய படி நம் கண்கள் கர்த்தரை மட்டுமே நோக்கி பார்க்க வேண்டும் ஒரு நாளும் நாம் மனிதனை எதிர்பார்க்ககூடாது. சங்கீ-118:8,9-ல் கூறிய படி நாம் கர்த்தரை மாத்திரம் நம்ப வேண்டும்.

ஆம் தேவ பிள்ளைகளே, அப்படி நாம் கர்த்தரை மட்டும் நோக்கி பார்க்கும் போது நம்முடைய கொஞ்சத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்து மீதம் எடுக்க கிருபை செய்வார்.

லூக்-19:17 கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தபடியால் அனேகத்தின் மேல் அதிகாரியாக வைத்தார். ஆம் நாமும் கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களாய் இருக்கும் போது நம்மையும் உயர்த்துவார் என்பதில் சந்தேகமில்லை.

### ஐந்து அப்பம் இரண்டு மீன்கள் யோவான்-6:9 முதல் 13 வரை

நம் தேவன் ஜனங்களுக்காக பரிதபிக்கிற தேவனாயிருக்கிறார். ஆம் பிரியமானவர்களே, அந்த இடத்தில் அநேக ஜனங்கள் இருக்கிறதை இயேசு கண்டு, இவர்களுக்காக சாப்பிட ஏதாகிலும் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அப்போது

இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவனிடத்தில் 5 வாற்கோதுமை அப்பங்களும் 2 மீன்களும் உண்டு என்று சீஷர்கள் கூறினார்கள.

உடனே இயேசு ஜனங்களை உட்கார வையுங்கள் என்று கட்டளையிட்டு அப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் பரிமாறினார்கள். அவர்கள் சாப்பிட்டு திருப்தி அடைந்து மீதமும் எடுத்தார்கள் என்று நாம் பார்க்கிறோம்.

ஆம் கர்த்தருடைய பிள்ளைகளே, நாம் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது அதை தேவன் ஆசீர்வதித்து பெருக செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

**சாறிபாத் ஊர் விதவை 1-ராஜா-17:9 முதல் 16 வரை**

சாறிபாத் விதவையை நோக்கி எலியா தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையை அவள் ஏற்றுக்கொண்டாள். கடைசியாக அவளுக்கு இருக்கின்ற அந்த கொஞ்சத்திலும் அவள் உண்மையுள்ளவளாயிருந்து கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்தாள்.

கர்த்தர் அதை ஆசீர்வதித்து தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிட்டு, நாள் மட்டும் மா செலவழிந்து போவதும் இல்லை கலசத்தில் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று ஆசீர்வதித்தார். நாமும் அது போல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து வாழும்போது கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களாய் இருக்கமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

**பிலதெல்பியா சபை வெளி-3:18**

பிலதெல்பியா சபைக்கு கர்த்தர் சொன்ன வார்த்தை உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும் நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியால் இதோ, "திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் அதை ஒருவனும் பூட்ட மாட்டான்" ஆம் நாமும் வசனத்தைக்கொண்டு உத்தமமாய் வாழும்போது நமக்காகவும் கர்த்தர் திறந்த வாசலை வைத்திருக்கிறார்.

**இரண்டு காசு போட்ட விதவை மாற்கு-12:42,43,44**

இரண்டு காசு போட்ட விதவை கடைசியாக தன் ஜீவனுத்துக்கென்று வைத்திருந்த கொஞ்சத்தையும் கர்த்தருக்கென்று போட்டாள். அது அவர் கர்த்தர் மேல் வைத்திருந்த அன்பையும் விசுவாசத்தையும் வெளிபடுத்துகிறது.

நாமும் அந்த ஸ்தீரியை போல கொஞ்சத்திலும் உண்மையுள்ளவர்களாய் இருப்போம்.

**பவுலின் உண்மையுள்ள ஊழியம் அப்-14:19 முதல் 22**

வேதத்தில் நாம் வாசிக்கிறோம் பவுல் தன் வாழ்க்கையை கர்த்தருக்கென்று ஒப்பு கொடுத்து ஊழியம் செய்து வருகையில் சில யூதர்கள் பவுலுக்கு விரோதமாய் எழும்பி அவரை கல்லெறிந்து மரித்துப் போனானென்று எண்ணி விட்டு சென்றார்கள். அந்த நேரத்திலும் பவுலுக்கு இருந்த கொஞ்ச பெலத்திலும் அவர் உடனே எழுந்து மறுநாள் ஊழியத்திற்கென்று புறப்பட்டார். அதினிமித்தம் அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி கொண்டார். ஆம் நாமும் இதுபோல கொஞ்ச பெலத்திலும் உண்மையாய் கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஒப்புக்கொடுப்போம்.

( தொடர்ச்சி 5 ஆம் பக்கம் )















# கடந்த மாத நிகழ்வுகள் தங்களின் பார்வைக்கு சில



**உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்**

**செயற்குழு உறுப்பினர்கள்**

**சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்**

**66021072**

**செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்**

**99870126**

**பொருளாளர்– சகோ. எபநேசர்**

**23922058 – 50203472**

**பெண்கள் ஐக்கிய தலைவி**

**சகோதரி . பியூலா ஜெகநாதன்**

**95542834**

**வாலிப ஐக்கிய தலைவர் –**

**சகோ. ஆரோக்கியராஜ்**

**66159784**

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

**தங்களது ஜெப விண்ணப்பங்கள்**
**எதுவாக இருந்தாலும்**
**எங்களுக்கு தெரிவிக்கவும்**
**உங்களுக்காக ஜெபிக்க**
**ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.**

Private Circulation only